Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register STC. 77/18
Sessions prosecution
depositions of witness for PW1 cross

| | | |
|---|---|---|
| Time | : | 12.25 pm – 1.17pm |
| Name | : | திரு. சின்னசாமி |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 13th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

(சாட்சி Crlmp.No. 485/24. 486/24 ஆகிய மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட நிபந்தனை உத்தரவின் அடிப்படையில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார். )

குறுக்கு விசாரணை

1) நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் Small Scale Industries தொழில் செய்கிறேன். எந்த பெயரில் தொழில் செய்கிறேன் என்றால் KCR Enterprises என்ற பெயரில் தொழில் செய்கிறேன். KCR Enterprises என்ற நிறுவனம் பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தை 2015 க்கு முன்பு இருந்தே நடத்தி வருகிறேன் என்றால் ஆமாம். எனது நிறுவனத்திற்கு வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் ஆமாம். Chins Rajasekaran. K என்பது எனது நிறுவனத்தின் Email Id என்றால் ஆமாம். Chins Rajasekaran. K என்ற Email Id ல் இருந்து 09/11/2017 ம் தேதி மாலை 5.32 மணிக்கு எதிரி வெங்கடேஷனுக்கு மெயில் அனுப்பியுள்ளேன் என்றால் ஆமாம்.

2) நான் அனுப்பிய Mail ல் Please Find my Attachment file for my company Profile என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் எதிரிக்கு அனுப்பிய Email ஆவணம் என்றால் சரிதான். **அது எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது நிறுவனத்திற்கு 2015 ம் வருடத்தில் இருந்து வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் ஆமாம். எனது வருமான வரி கணக்கில் நிறுவனத்தின் வருமானம் எனக்கு வர வேண்டிய கடன் நான் பிறருக்கு கொடுக்க வேண்டிய கடன் ஆகியவற்றை காட்டிதான் தாக்கல் செய்வேன் என்றால் ஆமாம். 2015 ல் இருந்து தற்போதைய தேதி வரை எனது வருமான வரி கணக்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் முடியும். 30/10/2015 ல் எதிரிக்கு கொடுத்த ரூ.1,00,000/-ஐ எனது வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. கைமாற்றாக கொடுத்ததால் காட்டவில்லை.

3) எதிரிக்கு ரூ.1,00,000/- கை மாற்றாக கொடுத்ததால் அதை எனது வருமான வரி கணக்கில் காட்டவில்லை என்று எனது புகார் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 30/10/2015 ல் எனக்கு எவ்வாறு ரூ.1,00,000/- ம் வந்தது என்றால் தொழிலின் மூலம் வந்த பணத்தை எடுத்து கொடுத்தேன். ரூ.1,00,000/-ஐ தொகையாக எதிரிக்கு கொடுத்தேனா என்றால் காசோலை மூலமாகவும், ஆன்லைன் Transfer மூலமாகவும் கொடுத்தேன். நான் எதிரிக்கு 30/10/2015 ல் ரூ.1,00,000/- ம் கொடுத்ததாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எதிரிக்கு ரூ.1,00,000/- ஐ எந்த வங்கியில் இருந்து எதிரிக்கு Transfer செய்தேன் என்றால் எனது ICICI வங்கி Current Account ல் இருந்து Transfer செய்தேன். எனது ICICI வங்கி கணக்கின் Statement ஐ தாக்கல் செய்ய முடியும் என்றால் முடியும்.

4) எனது வங்கி கணக்கு அறிக்கையில் 30/10/2015 ல் நான் எதிரிக்கு ரூ.1,00,000/- ம் அனுப்பியதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய் என்றால் Statement ஐ தாக்கல் செய்கிறேன். 30/10/2015 ல் எனது கையில் ரூ.1,00,000/- ம் இருந்தது என்பதற்கு ஆவணங்களை உள்ளதா என்றால் Bank Statement உள்ளது. எத்தனை மணிக்கு எதிரிக்கு ரூ.1,00,000/- ம் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் ஒரே ஊரில் இருக்கிறோம். எனது வழக்கில் எதிரியை குடும்ப நண்பர் என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால்

இல்லை. எதிரி எனக்கு தெரிந்தவர் ஆவார். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் Taal ஏரோனேட்டிக்ஸ் நிறுவனத்தில் பணிபுரிகிறார். எதிரியின் குடும்பத்தில் நடக்கும் நிகழ்வுகள் குறித்து எனக்கு தெரியும் என்றால் எதிரி சொன்னால் தெரியும். எதிரிக்கு 2017 ஜனவரில் விபத்து ஏற்பட்டது தெரியுமா என்றால் தெரியும். எதிரி 4, 5 மாதங்கள் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் வீட்டில் தான் இருந்தார்.

5) வீட்டில் இருந்தப்படியே எதிரி சிகிச்சை எடுத்து கொண்டு வந்தாரா என்றால் அது பற்றி தெரியாது. எதிரியின் மனைவி பெயர் என்னவென்றால் காந்தாமணி ஆகும். 2017 அக்டோபரில் சேலம் மருத்துவ மனையில் எதிரிக்கு பெண் குழந்தை பிறந்தது என்றால் அது பற்றி தெரியாது. எதிரி அதைப் பற்றி என்னிடம் சொல்லவில்லை. ஒரே தெருவில் குடியிருக்கும் எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எதிரி தெரிந்தவர் என்று வழக்கில் சொல்லியுள்ள நிலையில் எதிரிக்கு குழந்தை பிறந்த விவரம் தெரியாது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஒரே தெருவில் குடியிருக்கவில்லை. ஒரே ஏரியாவில் குடியிருக்கிறோம். பணம் கேட்ட பிறகு எதிரி என்னிடம் பேசுவதில்லை. எதிரிக்கு 30/10/2015 ல் ரூ.1,00,000/- ம் பணம் கொடுத்ததிற்கு எதிரியிடமிருந்து புரோ நோட்டோ, கடன் பத்திரமோ எழுதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. 15 நாட்களில் திருப்பி தருவதாக சொன்னார்.

6) 30/10/2015 ல் இருந்து 15/11/2015 க்குள் எதிரி பணத்தை திருப்பி தருவதாக சொன்னாரா என்றால் ஆமாம். ஆனால் திருப்பி தரவில்லை. எதிரியிடம் பணத்தை திருப்பி கேட்டேனா என்றால் கேட்டேன் எதிரி பணத்தை திருப்பி கொடுக்கவில்லை இன்னும் டைம் வேண்டுமென்று கேட்டார். 02/11/2015 ல் எதிரிக்கு ரூ.3,08,000/- பணம் கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். எதிரி ரூ.1,00,000/- ஐ திருப்பி செலுத்தாத நிலையில் 02/11/2015 ல் ஏதற்காக எதிரிக்கு மீண்டும் ரூ.3,08,000/- பணம் கொடுத்தேன் என்றால் நிலம் வாங்குவதாக சொல்லி பணம் கேட்டார். அனைத்தையும் சேர்த்து ஒரே டைம் திருப்பி கொடுத்து விடுவதாக சொன்னார். 02/11/2015 க்கு பிறகு எதிரி நிலம் வாங்கினாரா இல்லையா என்று தெரிந்து கொண்டேனா என்றால் அவர் என்னிடம் சொல்லவில்லை. இன்னும் 2 மாதங்கள் ஆகும் என்றும், அட்வான்ஸ் கொடுத்திருப்பதாகவும் சொன்னார்.

7) யாரிடம் எந்த ஊரில் எவ்வளவு நிலத்தை வாங்குவதாக என்னிடம் சொன்னார் என்றால் கெலமங்கலம் ரோட்டில் பேலகொண்டப்பள்ளியில் நிலம் வாங்குவதாக சொன்னார். டிபன்ஸ் கேரிடர் வருகிறது என்று கூறி பிரஸ்டேஜி Company 3500 ஏக்கர் நிலம் வாங்கி தருவதாக அதற்கு உதவி செய்யுமாறு கேட்டார். 02/11/2015 லேயே எதிரி நிலம் வாங்குவதாக சொல்லி விட்டார் என்றால் ஆமாம். மேற் சொன்ன விவரத்தை எனது புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 02/11/2015 ல் எதிரிக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும தொகைக்கு புரோ நோட்டோ, கடன் பத்திரமோ எழுதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. காசோலை கொடுத்துள்ளார். 02/11/2015 ல் எதிரி எனக்கு காசோலை கொடுத்தாரா என்றால் அந்த தேதியில் கொடுக்கவில்லை. அதன் பிறகு

கொடுத்தார்.

8) 02/11/2015 ல் என்னிடம் ரூ.3,08,000/- ம் தொகை இருந்ததிற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 02/11/2015 ல் எதிரிக்கு ரூ.3,08,000/- ம் பணம் கொடுத்ததிற்கு எழுத்து பூர்வமான எந்த ஆதாரங்களும் இல்லை என்றால் சரிதான். 30/10/2015, 02/11/2015 ஆகிய தேதிகளில் எனக்கு வருமானம் இருந்தது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. Statement உள்ளது. 30/10/2015, 02/11/2015 ஆகிய தேதிகளில் எனக்கு வசதி இருந்தது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை எனது நிறுவனத்தின் மூலம் வந்த தொகையை வைத்து கொடுத்தேனா அல்லது வேறு வருமானத்தை வைத்து கொடுத்தேனா என்றால் எனது நிறுவனத்தின் மூலம் வந்த தொகையை கொடுத்தேன். KCR Enterprises என்ற நிறுவனத்தின் மூலம் வந்த தொகையை செலவலிக்கும்உரிமை அதன் உரிமையாளருக்கு தான் உள்ளது என்றால் சரிதான்.

9) நான் ITI படித்துள்ளேன். ஆங்கிலம் எழுத, படிக்க தெரியுமா என்றால் ஒரு அளவிற்கு தான் தெரியும். இவ்வழக்கில் புகார்தாரர் என்ற கோதாவில் குறிப்பிட்டிருப்பது நான் தான் என்றால் சரிதான். எனது வழக்கில் KCR Enterprises என்ற நிறுவனத்தின் உரிமையாளர் நான் தான் என்று குறும் தலைப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கை KCR Enterprises என்ற நிறுவனத்தின் மூலம் வந்த தொகையை செலவழித்ததிற்காக அதன் உரிமையாளரல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் உரிமையாளர் தான் தாக்கல் செய்துள்ளேன் குறும் தலைப்பில் சொல்லவில்லை.

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/ திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்
ஒசூர்.